பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 02 வெள்ளிக்கிழமை (17-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 232

# இராணுவ இழப்பை ஈடுசெய்ய ஓடியவர்களுக்கு மீண்டும் வேலை

## விசாரணை, நிபந்தனையின்றி சேர்க்க முடிவு

கொழும்பு, ஜூலை 17

விடுதலைப் புலிகளுடன் நடந்து வரும் யுத்தத்தில் இராணுவத் தரப்பில் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. அதனை ஈடுசெய்யும் பொருட்டு, யுத்தத்துக்குப் பயந்து எவ்வித அறிவித்தலும் இல்லாமல் சேவையை விட்டு ஓடியவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள இராணுவ உயர்பீடம் முடிவுசெய்திருக்கிறது!

உயர்நிலை இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சேவையை விட்டு ஓடியவர்களை எவ்வித விசாரணையோ அல்லது நிபந்தனையோ இல்லாமல் மீண்டும் படையில் சேர்ப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் சேவையில் இருந்து தலைமறைவாகி விட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்டுவரும் யுத்தத்தில் இராணுவத்துக்குப் பெரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனை ஈடுசெய்ய இராணுவத்தை விட்டு ஓடியவர்களை மீண்டும் சேவைக்கு அமர்த்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசுக்குக் கடன் வழங்க உலக வங்கி கடும் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 17

ஸ்ரீலங்கா அரசுக்குக் கடன் வழங்குவதற்கு உலக வங்கி கடும் நிபந்தனைகளை விதித்துள்ளதாக அறியவருகிறது.

10 கோடி டொலர் கடன் வழங்குமாறு அரசு விடுத்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து உலக வங்கி அதிகாரிகள் இப்போது கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

ஆனால் பேச்சுக்கள் மிகவும் கடினமான, கிரமமான சூழ்நிலையிலேயே நடந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உலக வங்கி அதிகாரிகளும், நிதியமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தலைமையிலான அரசு அதிகாரிகளும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று வாக்கெடுப்பு

புதுடில்லி, ஜூலை 17

பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று வெள்ளிக்கிழமை லோகசபையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

விவாதத்துக்கு பிரதமர் இன்று பதிலளிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் இளைஞர் 8 பேர் திருமலை நகரில் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 17

திருகோணமலை நகரப் பகுதியில் கடந்த புதன்கிழமை தேடுதல் நடத்திய பொலீஸார் எட்டு தமிழ் இளைஞர்களை கைது செய்தனர்.

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் அனுமதி அட்டை இன்றி வசித்ததாலேயே மேற்படி எட்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர் என பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் - வீடுகளில் இருந்த இளைஞர்கள் தனியாக அழைத்துச் செல்லப் பட்டு அவர்களின் அனுமதி அட்டைகளைப் பொலீஸார் பறித்தெடுத்தனர் என்றும் - அதன் பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அறியவருகிறது. [ஒ-5]

### ஜி. சீ. ஈ. பரீட்சை நேர அட்டவணை

எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெற உள்ள 1992 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் நேர அட்டவணை 3 ஆம் பக்கத்தில்.

## புலிகளை வெற்றி கொள்ள

# படையினர் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருக்கும்

### பி, பி, ஸி விமர்சனம்

கொழும்பு, ஜூலை 17

பலவேகய - 2 சண்டையில் படையினர் வெற்றி ஈட்டியிருக்கலாம். ஆனால் புலிப் படையினருக்கு எதிராக நடத்தும் போரில் வெற்றி அடைவதானால் பாதுகாப்புப் படையினர் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டி இருக்கும்;

இவ்வாறு பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் சியாக்கா நூசு தமது விமர்சனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகள் இப்போது தமது கை ஓங்கியிருப்பதாக நினைக்கின்றனர். இராணுவம் ஒரு அடி முன்னேறியிருக்கலாம். ஆனால் சென்ற வார இறுதியில் 46 இராணுவத்தினர் புலிப்படையினரால் கொல்லப்பட்டிருப்பது இராணுவம் எத்தகைய எதிர்ப்பை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது என்பதை இராணுவத் தளபதிகளுக்கு உணர்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்படி அந்த விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-10]

## ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை:

## விமானம் மூலம் வினாத்தாள் எடுத்து வர ஏற்பாடு

### அனுமதி அட்டைகள் வந்துவிட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 17

அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சைக்கான வினாத்தாள்களை விமான மூலம் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான மூலம் பலாலிக்கு எடுத்துவரப்படும் வினாத்தாள்கள் காங்கேசன் துறைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடாகியுள்ளதாக கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் —

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் காகிதாதிகள் அனைத்தும் நேற்று 'குமண' கப்பலில் இங்கு வந்து சேர்ந்து விட்டன. [ஒ-3-162]

## அரச அதிபர் விவகாரம்:

## செஞ்சிலுவைத் தலைமையக தவறே காரணமாம்!

### 'குமண'வில் இன்று பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். அரசாங்க அதிபர், 'குமண' கப்பலில் ஏறிய பின்னர் கூட்டுப்படைத் தலைமையக அனுமதி கிடைக்கவில்லை என்று கூறி இறக்கி விடப்பட்ட சம்பவம் குறித்துச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். பிரதிநிதிகள் மன்னிப்புக் கேட்டுள்ளனர்.

அன்றைய சம்பவத்துக்கு, தங்கள் தலைமையகத்தில் ஏற்பட்ட தவறே காரணம் என்றும் —

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அரச அதிபர் கொழும்பு செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்று தமது பிரதிநிதி கப்பலில் வைத்துக் கூறியது பிழையானதாகும் என்றும் —

தமது தரப்பில் ஏற்பட்ட தவறுக்கு மன்னிப்புக் கேட்பதாகவும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய ஜனாதிபதியாக சங்கர் தயாள் சர்மா

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா [74 வயது] தெரிவு செய்யப்பட்டார்.

மத்திய பிரதேச மாநிலம் போபால் நகரில் 1918 இல் டாக்டர் சர்மா பிறந்தார்.

துணை ஜனாதிபதியாக டாக்டர் சர்மா பணிபுரிந்து வந்தார்.

கடந்த 13 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் டாக்டர் சர்மா இந்திரா காங்கிரஸின் ஆதரவுடன் போட்டியிட்டார்.

டாக்டர் சங்கர் தயாள் சர்மாவுக்கு 6 லட்சத்து 75 ஆயிரத்து 864 வாக்குகளும், பேராசிரியர் ஜி. ஜி. சுவெலுக்கு 3 லட்சத்து 46 ஆயிரத்து 485 வாக்குகளும் கிடைத்தன. மொத்தம் பதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

### மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

செட்டிகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் பகல் வேளை கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஏவப்பட்ட ஷெல்கள் பல மைல் தொலைவில் உள்ள மன்னார், வவுனியா எல்லைப்புற கிராமங்களில் வீழ்ந்து

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், வாங்குகள், இரண்டு லாச்சியுடன் மேசை, மேசை, இரும்புக் கம்பியால் செய்த கேற் வகைகள், நிலை கதவுகள், யன்னல் கதவுகள், பனை மரங்கள். பலகைகள், நீப்பகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர்.

[21771]

### பாவித்த மணிக்கூடுகள்

பாவித்த தரமான மணிக்கூடுகள் வாங்கப்படும், விற்கப்படும். பழைய மணிக்கூடுகளும் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் கடிகாரங்கள், ரேடியோ, ரீவி, டெக், ஆகியன உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்க்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [வானவில் அருகாமை] யாழ்ப்பாணம்.

[5162]

### இடம்மாற்றம்

இதுவரை 15 வருட காலமாக யாழ் பஸ் நிலையம் முன்பாக இயங்கி வந்த டில்க்கா வாச் வேக்ஸ் எனும் ஸ்தாபனம் தற்சமயம் 284, ஸ்ரான்லி வீதியில் [வானவில் அருகாமை] இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

[5161]

### பிரத்தியேக கணித வகுப்பு

G. C. E. (O/L) முக்கிய பாடமாகிய கணிதம் அனுபவமிக்க ஆசிரியரினால் வீடுகளுக்குச் சென்றும், வீட்டிலும் குறுகிய காலத்திற்குள் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். விவரங்களுக்கு, காசி மாஸ்டர், 60/2, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(5166]

### புலமைப்பரிசில் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் வருடந்தோறும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை [ஆண்டு - 5) 19-7-92 ஞாயிறு, மு. ப 8-00, மு. ப. 11 - 00 மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(21775)

### வெளிவந்துவிட்டது

வரலாறும், சமூகக்கல்வியும் ஆண்டு 10 துமித மீட்டலுக்கான வினா-விடை. ஆக்கம்: க. சந்திரசேகரம். ஏகவிநியோகஸ்தர்கள் ஸ்ரீலங்கா புத்தகசாலை, இல. 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். விலை ரூபா 33/- மட்டுமே. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

[சி-2578]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் ''அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்'', இல. 15. 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(இ-2909)

### தேவை

ஆஸ்பத்திரி வீதியில் ஆரம்பமாக இருக்கும் வைத்திய நிலையத்துக்கு R. M. P or A. M. P, M. L. T., தாதியும் தேவை. நா. தனபாலசிங்கம், 51, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(5163)

### இலவச திருமண சேவை

31 வயது, பூசம், செவ்வாய் 1 I.C.M.A - II சித்தி, U.K இல் உத்தியோகம் புரிபவருக்கு U.K இல் மணமகள் தேவை. ஞாயிறு காலைகளில் சந்திக்கலாம், து விமலா, யாழ். நாச்சிமார், கோவிலடி.

[5157]

## பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூலை 17 கண்டியில் இம் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழாவை, மத்திய, மாகாண சபைக் கல்வி அமைச்சரும் மற்றும் இந்தச் சபையில் உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தமிழ் உறுப்பினர்களும் பகிஷ்கரிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

[த-எ]

## அன்பளிப்பு

தென்மராட்சி, ஜூலை 17 சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், கண்பார்வை குறைந்த மேலும் 45 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கினர்.

(ஒ-117)

**PERSONAL**

**NEW SCIENCE CENTRE** நடத்தும்

க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் **விலங்கியல்** பாடத்தில் தோன்றும் மாணவர்களுக்கான முன் மாதிரி வினாத்தாளை உள்ளடக்கிய

## "கருத்தரங்கு"

ஆசிரியர்: **R. ஈஸ்வரதாசன்** B. S. (Cey.)

Sat. Sun. 10 a.m. — 12 Noon

★ பரீட்சையில் தோன்றிய, தோன்றாத மாணவர்கள் இக் கருத்தரங்கில் இலவசமாகப் பங்கு கொள்ளலாம்.

★ முன் மாதிரி வினாத்தாள் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்

[சி-2589]

மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப்போட்டிகள்

## ஒத்தி வைப்பு


யாழ். கோட்ட கூட்டுறவாளர்களால் சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு, 18-07-1992 அன்று யா/கனகரத்தினம் (ஸ்ரான்லி) ம. வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த மேற்படி போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
யாழ். கோட்டம்.

[சி-2588]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

எப்பாவம் செய்தனம் என்பதறிந்திலம்!



அமரர்

**ஆ. மகாலிங்கசிவம்**

[நில அளவையாளர்]

ஈழத்தில்: **01—12—1942**

இதயத்தில்: **17—07—1989**

அப்பா! எமைப்பிரிந்தாண்டு மூன்றாயின போயிடினும்
தப்பாது நின்நினைப் பாரிடம் எங்குறை சாற்றிடுவோம்
இப்பாரில் உன்றனைப் போலொரு தந்தை கிடைப்பதரிதே
எப்பாவம் செய்தனம் என்பதறிந்திலம் எம்பரனே!

மனைவி, மக்கள், உறவினர்.

விததகபுரம் - விழிதிட்டி,
தெல்லிப்பழை

(4917)

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வைரவர் சாந்தி உற்சவ விஞ்ஞாபனம்

17 - 07 - 92 வெள்ளிக்கிழமை

வைரவப் பெருமானுக்கு மாலை 5 - 00 மணியளவில் விசேட அபிஷேகமும், மடையும் நடைபெறுவதைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகளாக

நாதஸ்வர, தவில் கச்சேரிகள்

**நல்லூர் உதயகுமார் குழுவினர்**

அதனைத் தொடர்ந்து

ஒரே மேடையில்

N. K பத்மநாதன் — K R. புண்ணியமூர்த்தி
P சிதம்பரநாதன் — T. உதயசங்கர்

இவர்களுடன் இணைந்து

திரு. K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்.

யாழோசை கண்ணன் வழங்கும்

**'வயலின் சோலோ கச்சேரி'**

தமிழ் ஈழ இசையுலகில் இருபத்தி ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்து ரசிகர்களின் பெரும் பாராட்டைப் பெற்ற

**அருணா இசைக்குழுவினரின்**

'இன்னிசை ராகங்கள்'

குறிப்பு:- பகல் 12 - 00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இங்ஙனம்
விழா உபயகாரர், தொண்டர்கள்.

[21779]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ், கிளைத் தலைமையகம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், தேசிய தொழில் பயிற்றுநர் சபையும் இணைந்து சுருக்கெழுத்து, உதவித்தாதியர், எழுதுவினைஞர், வாழைநார்த் தொழில் தெங்கு - பனம்பொருளுற்பத்தி, கத்தாளை நார்ப்பொருளுற்பத்தி, பிரம்புப்பொருள் உற்பத்தி, பாய் நெய்தல், தையல், தோற்பொருளுற்பத்தி, நீரிறைக்கும் இயந்திரத் திருத்துநர், மிதிவண்டி திருத்துநர், தகரத்தொழில், தச்சுத்தொழில், மட்பாண்டத் தொழில், இரும்புத் தொழில், கைத்தறித்தொழில் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. தெரிவுப்படும் பயிலுனர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- வழங்கப்படும். இத்துறைகளில் பயில விரும்புவோர், விண்ணப்பப் படிவங்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுப் பணிமனைகளில் பெற்று பூர்த்தி செய்து, பிரிவுப் பணிமனைகளூடாக 19-07-1992க்கு முன் யாழ். கிளைத் தலைமையகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15-07-92.

[சி-2586]

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி பத்மநாதன்

உரும்பராய் வடக்கு இந்துக்கல்லூரி வீதியைச் சேர்ந்த திருமதி சறோஜினிதேவி பத்மநாதன் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் இலட்சுமிப்பிள்ளையின் மூத்த மகளும், இளைப்பாறிய விமானப் படை தொழில் நுட்பவியலாளர் இளையதம்பி பத்மநாதனின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (நோர்வே), ஜெயரூபன் [நோர்வே], ஜெயராஜ் [நோர்வே], ஜெயநந்தினி [உடுவில் மகளிர் கல்லூரி], ஜெயராகவன் [கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அருமைத் தாயாரும், தெய்வேந்திரன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், காலஞ்சென்ற யோகேஸ்வரி, குகதாசன், சாயாபதி ஜெகதீஸ்வரி, ராஜேஸ்வரி சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி குகதாசனின் மைத்துனியும், காலஞ்சென்ற இளையதம்பி, காலஞ்சென்ற தங்கம்மா, மலேசியாவைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவசம்பு [மலேசியா], சிவஞானம் [இளைப்பாறிய சிறாப்பர்], ரட்ண பாக்கியம், சரஸ்வதி [மலேசியா], மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மருமகளும் —

கந்தரோடையை சேர்ந்த காலஞ்சென்ற முருகையா, காலஞ்சென்ற சிதம்பரநாதன், நல்லூரைச் சேர்ந்த மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் உரும்பராயில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பராய் எருளன் மயானத்திற்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இளையதம்பி பத்மநாதன்.
(கணவர்)

(21789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தண்ணீரை சேமிப்போம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முப்பத்தாறு குளங்களைப் புனரமைக்கும் பணி தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் ஆதரவில் நேற்று ஆரம்பமாகியது. குடாநாட்டின் விவசாயத்தைப் பெருக்கவல்ல இப்பணியில் அக்கறை காட்டி அதனை நடைமுறைப்படுத்த முன் வந்த ஆய்வு நிறுவனத்தினர் பாராட்டுக்கு உரியவர்கள். முப்பத்தாறு குளங்களைப் புனரமைப்பது என்பது பாரிய பணி. புரட்டாதி, ஐப்பசியில் மழை தொடங்குவதற்கு முன்னர் அதனைப் பூர்த்தி செய்துவிட்டால் பெரும் சாதனையாகவும் அமையும்.

யாழ் குடாநாடு கடலால் சூழப்பட்ட பிரதேசம் இங்கு ஆறு ஒன்று காணும் இல்லை. வானம் பார்த்த இந்தப் பூமியைப் பண்படுத்திப் பயன் பெறுவதற்கு மழை நீரே பிரதான வளம். மாரி காலத்தில் பெய்யும் மழை நீர் வீண் போகாமல் — கடலில் சேராமல் — தடுக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டால்தான் கோடை காலத்தில் விவசாயம் செய்ய முடியும்.

இதனை அறிந்தே எங்கள் முதாதையர்கள் கிராமந்தோறும் சிறிய குளங்களையும், தோட்ட வெளிகளில் கேணிகளையும் வெட்டிக் கட்டினார்கள். வெட்டிய கேணிகளையும், குளங்களையும் வருடாந்தம் வண்டல் அகற்றியும், வரம்பை உயர்த்தியும் துப்புரவு செய்தும் நன்றாகப் பராமரித்தார்கள். அதனால் கோடை காலத்திலும் தயக்கமின்றி விவசாயத்தில் ஈடுபட்டு பிரதேசத்தின் உற்பத்தியைப் பெருக்கினார்கள்; தாமும் உழைத்துப் பொருளீட்டினார்கள்.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் இந்த நடைமுறை கைவிடப்பட்டது. மாரி காலத்தில் பெய்யும் மழை வீணே கடலில் போய்ச் சேர, குளங்களும் கேணிகளும் தூர்ந்து போயின. சில இருந்த இடமே தெரியாமல் மண் மட்டத்திற்கு வந்து "தொலைந்து" போயின.

சுயசார்புப் பொருளாதாரம் ஒன்றை நாடி நிற்கும் — கட்டாய தேவையாகிவிட்ட — இன்றைய காலகட்டத்தில், தூர்ந்துபோன குளங்களைப் புனரமைப்பதோடு மட்டுமன்றி குளங்களைப் புதிதாக வெட்டுவதற்கும் திட்டமிடப்பட வேண்டும். மழை குறைந்து வரும் சூழ்நிலையில் வானம் சுரந்தளிக்கும் சீவ அமுதமான மழையின் ஒவ்வொரு துளியையும் சேமித்துப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

அதற்கான பயன்தரு திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மழை நீரைத் தேக்குவதால் வரட்சியில் இருந்தும், தண்ணீர் பற்றாக்குறையில் இருந்தும், நில நீர் உவராகுவதில் இருந்தும் தப்பிக் கொள்ளலாம் என்பதை மக்கள் உணர வேண்டும்.

அது மட்டுமன்றி வரண்ட பிரதேசத்தில் வாழும் நாம் தண்ணீரை அளவோடு பாவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். விவசாயத்துக்குக் கூட அளவுக்கு அதிகமாகத் தண்ணீரைப் பாவிக்காது கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். தண்ணீர் முகாமைத்துவம் குடாநாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதன் தேவையை உணர்ந்து செயற்படும் மனப்பக்குவமும் வளர்வது அவசியம்.

# புலிகளுக்கு எதிரான நடவடிக்கை; கால எல்லையின்றி தொடர முடியாது

## ஜெயலலிதா 'இந்து'வுக்கு பேட்டி

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை காலவரையறையின்றி தொடர முடியாது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகளுக்காகப் பெருமளவு பணம் விரயமாகிக் கொண்டிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

சென்னையில் இருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியான 'இந்து'வுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:

ஆயிரம் கிலோ மீற்றர் கரையோரத்தில் தொடர்ச்சியான கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருளாதாரத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மாநிலத்தின் வளங்கள் விரயமாகிக் கொண்டிருக்கின்றன.

புலிகள் தீவிரமாக இயங்கும் வரை அவர்கள் தமிழ் நாட்டுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருப்பர். இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையேயான தூரம் மிகவும் குறுகியதாக இருப்பதால் ஆயிரம் கிலோ மீற்றர் கடற்கரையோரத்தை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டியுள்ளது.

மத்திய ரிசர்வ் பொலீஸ் படையின் 10 பிரிவுகள், தமிழ் நாடு விசேட பொலீஸ் மற்றும் ஆயுத ரிசர்வ் பொலிஸின் 10 பிரிவுகள், 5 கடற்படை பிரிவுகள் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை தவிர 33 பொலிஸ் சோதனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கரையோர ரோந்துக்கான செலவை மத்திய அரசே ஏற்றுள்ளது. பொலீஸ் மற்றும் பரா இராணுவத்தினரின் மன உற்சாகம் தளர்ந்து விடாத வகையில் தொடர்ச்சியாக கரையோரத்தைக் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க எவ்வளவு பணம் செலவாகும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். இது மாநிலத்தின் பொருளாதாரத்தில் ஒரு விரயமாகும் என்றார்.

இதே வேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கண்டு அதை அமுல் செய்வது முற்றிலும் இலங்கை அரசைப் பொறுத்ததே என்றும் அவர் சொன்னார்.

## காங்கேசனில் இறங்க மறுத்த கர்ப்பிணிப் பெண்கள்!

யாழ்ப்பாணம், ஜுலை 17

திருகோணமலையில் இருந்து 'குமணை' கப்பலின் வந்த தீவுப்பகுதியைச் சேர்ந்த இரு கர்ப்பிணிப் பெண்கள் காங்கேசன்துறையில் இறங்க மறுத்துவிட்டனர்!

தீவுப்பகுதியில் இருந்து ஏற்கனவே திருகோணமலைக்கு சென்று, அங்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த ஆறு கர்ப்பிணிப் பெண்களும் நேற்று 'குமணை' கப்பலில் வந்தனர்.

இவர்களில் பிரசவம் முடிந்த நான்கு பெண்கள் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டனர்.

ஆனால் அவர்களுடன் வந்த ஏனைய இரு கர்ப்பிணிகளும் தம்மை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்லுமாறும், காங்கேசன்துறையில் இறங்கமாட்டோம் என்றும் தெரிவித்தனராம்.

எனினும் கப்பல் மாலுமிகளும், கடற்படையினரும் அவர்களை காங்கேசன்துறையில் இறக்கிவிட்டனர்.

6 கர்ப்பிணிகளுடன் அவர்களது உதவி ஆட்கள் உட்பட 17 பேர் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டனர். [ஒ-3]

## இமையாணனில் திருடப்பட்டவை மீட்பு

வடமராட்சியில் இமையாணன் பகுதியிலுள்ள 'கராஜ்'' ஒன்றிலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் பெறுமதிமிக்க பொருள்கள் பலவற்றை தமிழீழ காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் 90 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

திட்டமிட்டு நடத்தப்பட்ட இத் திருட்டுத் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை நேர அட்டவணை விவரம்

யாழ்ப்பாணம், ஜுலை 17

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாக உள்ள 1992 ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் நேர அட்டவணை வெளிவந்துள்ளது. முதலாம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இப்பரீட்சை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர அட்டவணை விவரம் வருமாறு:-

| திகதி | காலை | மாலை |
|---|---|---|
| 01-08-92 | விலங்கியல் I | சரித்திரம் I |
| | பிரயோக கணிதம் I | |
| | சரித்திரம் II | |
| 03-08-92 | பிரயோக கணிதம் II | மனைப் பொருளியல் I |
| | விலங்கியல் II | |
| | சித்திரம் I | |
| 04-08-92 | தூயகணிதம் I | மனைப் பொருளியல் II |
| 05-08-92 | தாவரவியல் I | தூயகணிதம் II |
| | தமிழ் I | |
| 06-08-92 | தாவரவியல் II | சங்கீதம் — கர்நாடகம் I |
| | தமிழ் II | சங்கீதம் — மேலைத்தேய I |
| 07-08-92 | இரசாயனவியல் I | நாட்டியம் — பரதம் I |
| | பொருளியல் I | |
| 08-08-92 | இரசாயனவியல் II | சங்கீதம் — கர்நாடகம் II |
| | நாட்டியம் — பரதம் II | சங்கீதம் — மேலைத்தேய II |
| 10-08-92 | பௌதிகவியல் I | |
| | கணக்கியல் I | |
| 11-08-92 | பௌதிகவியல் II | விவசாய விஞ்ஞானம் I |
| | கணக்கியல் II | |
| 13-08-92 | பொருளியல் II | விவசாய விஞ்ஞானம் II |
| 14-08-92 | சித்திரம் II | இந்துசமயம் I |
| | ஆங்கிலம் I | கிறீஸ்தவம் I |
| | | சமஸ்கிருதம் I |
| 15-08-92 | | இந்துசமயம் II |
| | | கிறீஸ்தவம் II |
| | | சமஸ்கிருதம் II |
| 17-08-92 | அரசியல் மூலதத்துவம் I | வர்த்தகமும் நிதியும் I |
| 18-08-92 | புவியியல் I | வர்த்தகமும் நிதியும் II |
| 19-08-92 | புவியியல் II | இந்துநாகரிகம் I |
| 20-08-92 | புவியியல் III | இந்துநாகரிகம் II |
| 21-08-92 | சித்திரம் III | அளவையியல் I |
| | ஆங்கிலம் II | |
| 22-08-92 | அரசியல் மூலதத்துவம் II | நாடகமும் அரங்கியலும் I |
| 24-08-92 | நாடகமும் அரங்கியலும் II | அளவையியல் II |
| 25-08-92 | நாடகமும் அரங்கியலும் III | |

## திருநாவுக்கரசு கைதாகி விடுதலை

சென்னை, ஜுலை 17

தமிழ்நாடு மாநில முன்னாள் அமைச்சரும் அண்ணா புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான திரு. எஸ். திருநாவுக்கரசு நேற்று லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார். [ஒ-எ]

## துணை ஜனாதிபதி தெரிவுக்கு வேட்புமனு

புதுடில்லி, 17

இந்தியாவின் துணை ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் தமது வேட்புமனுக்களை இன்று வெள்ளிக்கிழமை முதல் தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கடைசித் திகதி இம்மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

இந்திய நாடாளுமன்றத்தின் லோகசபை மற்றும் ராஜ்யசபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் (நியமன எம்.பிக்கள் உட்பட) அனைத்து எம்பிக்களும் துணை ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலில் வாக்களிக்கும் தகைமையை பெற்றுள்ளனர். (இ-ஈ)

## கருத்து கணிப்பில புஷ் 2ஆம் இடத்தில்

நியூயோர்க், ஜுலை 17

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளின்ரன் 35 சதவீத வாக்குகள் பெற்று முன்னணியில் நிற்கிறார்.

தற்போதைய ஜனாதிபதியும் குடியரசுக்கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் புஷ் 31 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தில் இருக்கிறார்.

சுயேச்சை வேட்பாளரான றொஸ் பெரொட் 24 சதவீத வாக்குகள் பெற்றுள்ளார்.

நியூயோர்க் டெய்லி நியூஸ் அரசியல் தாள் என்பன இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தின.

## அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜுலை 17

கொழும்புத்துறை மணியம் தோட்டம் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய சடலம் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ் போதனா வைத்தியசாலை பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. [இ-15]

## மரண தண்டனை ஊர்ஜிதம்

புதுடில்லி, ஜுலை 17

இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் ஏ எஸ் வைத்தியாவைக் கொலை செய்த வழக்கில் சுகுதேவ் சிங் சுக்காவிற்கும் ஹர்ஜிந்தர் சிங் ஜிந்தாவிற்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் ஊர்ஜிதம் செய்தது.

நீதியரசர்கள் ஏ. எம். அகமேதியும், கே. இராமசாமியும் இத்தீர்ப்பை வழங்கினார்கள். [த-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் ஷோக் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 17 சுவிடன் உப்சால் பல்கலைக் கழக பேராசிரியர் திரு. பீற்றர் ஷோக் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

ஒருமாத காலம் இங்கு தங்கியிருக்கும் அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் பல தலைப்புகளில் விரிவுரைகளை நிகழ்த்துவார். [ஒ-3]

## அரசுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

அரச வங்கிகளை அரசியல் தலையீடற்ற தனியார் கம்பனிகளாக்குவது, ரூபாவின் மதிப்பைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக வங்கி நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ-ஒ-10]

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

அன்னார் சாந்தியின் அன்புக் கணவரும், உகந்தன், கார்த்திகனின் அன்புத் தந்தையும், சிவஞானம் (எம். எஸ். இன்டஸ்ரீஸ், கோண்டாவில்), மகேஸ்வரி நடராசா, புஷ்பவதி சபாநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற K. C. நடராசா, வெ. சபாநாயகம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம், கொழும்பு), சரஸ்வதி, மஞ்சுளா பாலச்சந்திரன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி சரவணமுத்துவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. சிவஞானம்.

24, கிரகரிஸ் றோட்,
கொழும்பு - 7. [சி-2585]

## திருமதி இராசகிளி அந்தோனிப்பிள்ளை

தெல்லிப்பழையில் வசித்த திருமதி இராசகிளி அந்தோனிப்பிள்ளை 12-07-92 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நீ. அந்தோனிப்பிள்ளை [ஞானசிங்கம், பரந்தன், இரசாயனத் தொழிற்சாலை] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லப்பா தம்பதிகளின் புதல்வியும் பவானி [லண்டன்] ஞானம் [ஜேர்மனி], கணேஸ் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீ. யேசுதாசன்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [21781]

## திருமதி அழகம்மா நல்லையா

திருமதி அழகம்மா நல்லையா [இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இராம கிருஷ்ணா வித்தியாலயம்] காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. ச. நல்லையா [முன்னாள் ஆசிரியர், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை] யின் அன்பு மனைவியும், திருமதி அங்கையர்க்கண்ணி ராதாகிருஷ்ணன், [கனடா], ஸ்ரீதரன் [பங்காளர் V. S. B Group, ஸ்ரான்லி வீதி], பகீரதன் [ஜேர்மனி], அனிதாகினி [விரிவுரையாளர், யாழ் மருத்துவ பீடம்], வீரச்சாவடைந்த பாஸ்கரன் லெப். கரன், சூட்டி], அனுராதா ஆகியோரின் அருமைத் தாயாரும், க. ராதாகிருஷ்ணன் [முன்னாள் உத்தியோகஸ்தர், ஏயர் லங்கா நிறுவனம்] அவர்களின் அன்பு மாமியும், ஜதுநந்தனின் ஆசைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (17 - 07 - 92) இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்!
ந. ஸ்ரீதரன் (மகன்)

25, பாஸ்கரன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். [21782]

## யோண்பிள்ளை (ஞானப்பிரகாசம்)

வைத்தி யோண்பிள்ளை (ஞானப்பிரகாசம்) 16-07-92 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், அருட்செல்வி யூவேமியா [அதிபர், செல். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை], திருமதி பிறிஜிற் பாக்கியநாதர், திருமதி கொறற்றி றோச் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மி பாக்கியநாதர், திரு. பி. றோச் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இவரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (17-07-92) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
திரு பிலிப்றோச்.
(மருமகன்)

51, ஈச்சமோட்டை, பாஷையூர்,
யாழ்ப்பாணம். [21783]

## வீரமரணம்

மணலாறில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்துச் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

வெற்றிகொண்டான் அல்லது நவசிங்கம் [செபஸ்தியான்பிள்ளை கவிரன் பேர்னாட் - குருநகர்], முருகவேள் அல்லது முருகமூர்த்தி [தங்கலிங்கம் கோணேஸ்வரன் - இணுவில்] ஆகிய இருவருமே வீரமரணமடைந்தனர்.

இதேசமயம்—

கடந்த 5 ஆம் திகதி கட்டைக்காட்டில் இடம்பெற்ற மோதல்களின்போது விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை கதிரவன் அல்லது கீற் [குணசேகரம் நகுலேந்திரன் - அரியாலை] என்ற போராளி கடந்த செவ்வாயன்று வீரமரணமடைந்துவிட்டார். [ஒ-5]

## செஞ்சிலுவைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேசக் குழுவின் யாழ். பிரதிநிதிகள் நேற்று அரச அதிபரிடம் நேரில் சென்று கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை —

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கமும் 'குமண' கப்பல் மூலம் இன்று கொழும்பு பயணமாகின்றனர். அதற்கான கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி கிடைத்துள்ளது. அவ்வனுமதி கிடைத்திருப்பது குறித்து ச. செ. ச குழு அவர்களுக்கு நேற்று தகவல் தெரிவித்திருந்தது [அ-3-162]

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது என்றும் —

அவர்களை ஆரம்பத்தில் சேவைக்கு அமர்த்தும்போது வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்குவது என்றும் — முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### உடன் தேவையாம்

யுத்தத்தினால் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளினால் உருவாக்கியுள்ள இடைவெளியை அவசரமாக நிரப்பவேண்டியுள்ளது. எதிர் வரும் மாதங்களில் பூரண பயிற்சி பெற்ற படையணிகள் தேவைப்படுகிறது — என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓடிய படையினரை மீண்டும் சேவைக்கு எடுப்பதன் மூலம் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆட்பல இழப்பை ஈடு செய்வதுடன் போரிடும் படையணிகளின் பலத்தை அதிகரிப்பதே ஆகும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

ஓடிய படையினரில் பெரும்பாலானோர் முன்நிலைப் படையினர் என்றும் அவர்கள் மீண்டும் சேவைக்கு வந்தால் பயிற்சி ஏதும் வழங்கப்படாமல் அவர்கள் போர்முனைக்கு அனுப்பப்படுவர் என்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கூறுகின்றனர்.

சாதாரண நிலையில் படையை விட்டு ஓடிய சிப்பாய் ஒருவர் 21 தினங்களுக்குள் மீண்டும் கடமைக்குத் திரும்பத் தவறும் பட்சத்தில் அவர் கைது செய்யப்பட்டு இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்.

புதிய முடிவின்படி, திரும்பி வரும் படையினர் மீது எதுவித விசாரணையும் நடத்தப்படமாட்டாது. [இ-எ]

## செட்டிகுளம் முகாம் தகர்ப்பு:

# பெண் புலிப் போராளிகளே முன்னின்று நடத்தினர்!

செட்டிகுளம் கட்டுப்பொத்த இராணுவ முகாமைத் தகர்த்த தாக்குதலை விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகளே முன்னின்று நடத்தினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தாக்குதலில் இருந்து உயிர் தப்பியதாகக் கூறப்படும் படையினர் சிலரை மேற்கோள்காட்டி "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

கட்டுப்பொத்த தாக்குதலின்போது உயிரிழந்த படையினரில் லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்த பெத்தியகொட என்ற அதிகாரியும் ஒருவர் என்றும்—

தப்பிய படையினர் கொடுத்த தகவல்களின்படி, 400க்கு அதிகமான விடுதலைப் புலிகளைக் கொண்ட 'யூனிற் 19' என்ற பிரிவே அத்தாக்குதலை நடத்தியது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## செவ்வாயன்று

# கிளாலி ஊடாக பயணிகள் வவுனியா சென்றனர்!

கொழும்பு, ஜூலை 17 கிளாலி உட்பட குடாநாட்டின் பிரதான கடற்பகுதிகள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டதாக கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்ட பின்னர், கிளாலி ஊடாக செவ்வாய் இரவு பெரும் எண்ணிக்கையானோர் பயணம் செய்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

யாழ். குடாநாட்டில் இருந்து கிளாலி ஊடாக செவ்வாய்க்கிழமை இரவு பயணம் செய்தவர்கள் சகலரும் புதன் கிழமை காலை வவுனியா சென்றடைந்தனர் என்றும்—

செவ்வாய் இரவு கிளாலியில் 50க்கு மேற்பட்ட படகுகள் சேவையில் ஈடுபட்டிருந்தன என்றும்—

இக்கரையிலும் அக்கரையிலும் பயணத்துக்காகக் காத்திருந்தோர் அனைவரும் இப் படகுகளில் பயணம் மேற்கொண்டனர் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

## ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17 ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சை [1992 - பகுதி 1] திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக்கிழமை யாழ் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ]

## இந்திய...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

வான வாக்குகளில் 64.78 சதவீதத்தை டாக்டர் சர்மா பெற்றார். எதிர்கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்ட பேராசிரியர் சுவெலுக்கு 33.21 சதவீத வாக்குகள் கிடைத்தன.

சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிட்ட கே.கே, ஜோகிந்தர் சிங்குக்கு மூன்று சட்டசபை உறுப்பினர்களும் ஒரு எம். பியும் வாக்களித்தனர்.

கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகிக் கொண்ட திரு. ராம்ஜெத்மலானிக்கு பதினொரு சட்டசபை உறுப்பினர்களும் 2 எம். பிக்களும் வாக்களித்திருந்தனர்.

67 வாக்குகள் செல்லுபடியாகாதவை என்றும் ஒரு வாக்குச் சீட்டில் டாக்டர் சர்மாவை புகழ்ந்து பாடும் குறிப்பு எழுதப்பட்டிருந்ததாகவும் தேர்தல் முடிவை வெளியிட்ட நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் சுதர்ஸன் அவர்வால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [ஒ-எ]

## ஓவிய கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 17 றெட்பானா ஸ்தாபனத்தால் இளைஞர், சிறுவர் குழுக்களுக்கு இடையில் நடத்த விருக்கும் கண்காட்சியும் கலை நிகழ்ச்சிகளும் நாளை சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

காலை 10 மணிக்கு கண்காட்சி திறந்து வைக்கப்படும் [ஒ]

## பதுக்கல் மண் எண்ணெய் பிடிபட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 17 யாழ். நகரப் பகுதியில் நேற்று காவல்துறையினரால் 15 'பரல்' மண்எண்ணெய் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட மண்எண்ணெய் நேற்றே யாழ்ப்பாணம் அடைக்கல மாதாகோவில் முன்றலில் வைத்து ஆளுக்கு 1 லீற்றர் வீதம் நியாய விலைக்கு விற்கப்பட்டது.

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூலை 17 ஆனையிறவு முகாம் பகுதியில் இருந்து நேற்றுக் காலை இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

பளைப் பகுதியில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-5]

## செட்டிகுளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்ததாகவும் — குடியிருப்புகள் பல சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை அடுத்து வவுனியா எல்லைப்புற கிராமங்களில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் இரவோடு இரவாக தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். [இ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org